உ

சிவமயம்

குருபாதம்



# தோத்திரத்திரட்டு

(பண்ணிசை மாமணிப் பட்டத் தேர்வுக்கான
திருப்பாடல்கள், அரும்பதவுரை, குறிப்புரையுடன்)

நல்லைக் குருமகா சன்னிதானம் அவர்களின்

## அறுபதாவது ஜயந்திவிழா வெளியீடு

தொகுப்பு:

ஆசிரியர் வே. சபாபதிப்பிள்ளை

நல்லை ஆதீன சமயப்பணிப் பொறுப்பாளர்

நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன வெளியீடு

உ

சிவமயம்

குருபாதம



# தோத்திரத்திரட்டு

(அரும்பதவுரை குறிப்புரையுடன்)

நல்லைக் குருமகா சன்னிதானம் அவர்களின்

## அறுபதாவது ஜயந்திவிழா வெளியீடு

தொகுப்பு:

ஆசிரியர் வே. சபாபதிப்பிள்ளை
நல்லை ஆதீன சமயப்பணிப் பொறுப்பாளர்

பண்ணிசை மாமணிப் பட்டத் தேர்வுக்குரிய
திருப்பாடல்கள்

நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன வெளியீடு
யாழ்ப்பாணம்

அனல ஆண்டு தைத்திங்கள் 26-ம் நாள்
8-2-77

அச்சுப்பதிவு:
விபுலாநந்த அச்சகம், யாழ்ப்பாணம்.

ஆதீன வெளியீடு — 40

★

முதற் பதிப்பு: 8—2—77

பிரதிகள் 1000

விலை ரூபா: 2-50

★

அச்சுப்பதிப்பு;
விபுலாநந்த அச்சகம், யாழ்ப்பாணம்.

# முன்னுரை

தோத்திர நூல்களைச் சிறுவர் முதல் வயோதிபர்வரை உள்ளம் நெகிழ்ந்து பண்ணுடன் பாடி இறைவன் திருவருளைப் பெற்றுய்யும் வழியைப் பரவச்செய்து தொண்டாற்றி வருவது நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்

இத்தொண்டு சிறந்தோங்க வளர்ந்து விளங்க நல்லை ஆதீனம் பண்ணிசை மாமணிப்பட்டத் தேர்வுக்குரிய திட்டமொன்றினைத் தொகுத்து சென்ற ஆண்டு தொடங்கித் தேர்வு நடாத்தி நான்காண்டுத் தேர்வுக்குரிய திட்டங்களை வெளியீடு செய்து பண்ணிசைத் தோத்திரம் பரவ ஆவன செய்து வருகின்றது. சென்ற ஆண்டு பல நூற்றுக்கணக்கானவர்கள் முதலாவதாண்டுத் தேர்வில் தோற்றிப் பலர் சித்தியடைந்தனர். இவ்வாண்டு முதலாவதாண்டுத் தேர்வும் இரண்டாவதாண்டுத் தேர்வும் நடைபெறும்.

தேர்வுக்குரிய தோத்திரப் பாடல்கள், அரும்பதவுரை, பண், இராகம், தாளம் முதலியன அடங்கிய தொகுதி நூலாக இருப்பின் தேர்வில் பங்குபற்றுவோருக்கு மிகவும் பயனுடையதாய் இருக்கும். ஆதலால் அப்படியொரு தோத்திரத் தொகுப்பினை வெளியிடும்படி அடியேனை குருமகா சன்னிதானம் அவர்கள் அருளாணையிட்டமையால் அவர்கள் அருளாணையின் வண்ணம் நூல்வடிவில் குருமகாசன்னிதானம் அவர்களின் ஜெயந்தி விழாமலராக வெளிவரத் திருவருள் கூட்டியுள்ளது. இதிலுள்ள பண்கள் திருவாவடுதுறை ஆதீன எட்டுச்சுவடிப்படியும் ஓதுவார்கள் தற்போது பண்ணிசைகளை தற்கால இராக ரீதியில் ஓதும் இராகம், தாளம் ஒருங்கமைய இராக அமைப்பில் பண்ணிசை வேந்தன் திரு. சி. இ. திருஞானசம்பந்தன் அவர்கள் உதவியுடன் அமைத்து வெளியிடலாஞேம். இதனை நல்ல முறையில் அச்சிட்டுதவ விபுலாநந்த அச்சகத்தார் முன்வந்தனர். பண்ணிசை வேந்தன் திரு. சி. இ. திருஞானசம்பந்தன் அவர்கட்கும், விபுலாநந்த அச்சகத்தாருக்கும் எனது மனமுவந்த நன்றி. இதில் தவறுகள் இருப்பின் அறிஞர் உலகம் தெரிவிப்பின் அன்புடன் ஏற்றுத் திருத்தஞ் செய்ய நன்றியுடன் முன்வருவேன் என்று தெரிவிக்கிறேன்.

வணக்கம்

நல்லை ஆதீனம்
8 - 2 - 77

வே. சபாபதிப்பிள்ளை
ஆதீன சமயப்பணிப் பொறுப்பாளர்.

கிடைக்குமிடம் :

நல்லை ஆதீனம், யாழ்ப்பாணம்.

*

விபுலாநந்த அச்சகம் - புத்தகசாலை
236, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்

# தோத்திரத் திரட்டு

## பண்ணிசை மாமணிப் பட்டப் பரீட்சைக்குரிய திருப்பாடல்கள்.

### முதலாம் ஆண்டு

### முதலாந் திருமுறை — திருஞானசம்பந்த சுவாமிகள்

தலம் — பிரமபுரம், இறைவன் — பிரமபுரீஸ்வரர், இறைவி — திருநிலைநாயகி.
பண் — நட்டபாடை இராகம் — நாட்டை தாளம் — ரூபகம்

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே. 1

தலம் — திருவண்ணாமலை, இறைவன் — அண்ணாமலைநாதர், இறைவி — உண்ணாமுலையம்மை
பண் — நட்டபாடை இராகம் — நாட்டை தாளம் — ரூபகம்

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே. 2

---

1 விடை - இடபம், மதி - சந்திரன், ஏடுடைய மலரான் - பிரமன்.

கடைவாயால் பால் சிந்தியிருந்ததனைக் கண்ட தந்தையார்; யார் தந்த பாலை உண்டாய்? என்று சிறு கோல்கொண்டு ஓச்சி உரப்ப; குழந்தை ஆளுடையபிள்ளையார்; கண்களில் ஆனந்த அருவி சொரிய வலக்கையை உயர்த்தி வானவெளியில் அம்மையப்பராய்; காட்சிதந்த இறைவனைச் சுட்டிக்காட்டிப் பாடிய திருப்பாடல்.

2 மழலை முழவு - சொற்றெளிவில்லாத முழவொலி, முழவொலி - மத்தளவோசை.

ஆளுடைய பிள்ளையார் திருஅறை அணிநல்லூரை வணங்கியபின், திருவண்ணாமலை தெரிய இறைவன் உமையாள் ஒரும் உடனாகிய அம்மையப்பனாக இருக்கும் நிலையைக் கண்டு பாடிய திருப்பாடல்

தலம் — கோயில் (சிதம்பரம்) இறைவன் — திருமூலட்டானேஸ்வரர் இறைவி — உமையம்மை
பண் — குறிஞ்சி இராகம் — யதுகுலகாம்போதி தாளம் — திஸ்ர திருபுட

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. 3

தலம் — திருச்சிராப்பள்ளி, இறைவன் — திருமலைக்கொழுந்தர், இறைவி — மட்டுவார்குழலி
பண் — குறிஞ்சி இராகம் — யதுகுலகாம்போதி தாளம் — திஸ்ர திருபுட

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிருமே 4

திருச்சிற்றம்பலம்

## இரண்டாந் திருமுறை

தலம் — திருவாலவாய் (மதுரை) இறைவன் — சொக்கநாதர் இறைவி — மீனாட்சி
பண் — காந்தாரம் இராகம் — நவரோஸ் தாளம் — ரூபகம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே. 5

---

3 கற்று – வேதங்களை ஓதி, எரியோம்பி – கற்ற முறைப்படி வேள்வி செய்து, கலி – பாவம், முற்றாவெண் திங்கள் – பாலசந்திரன், பற்றா – (இறைவன் திருவடியைப்) பற்றுக்கோடாக.
முதல்வன் பாதத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டவர்களைப் பாவம் தொடராது.

4 வெள்ளேறு – வெண்மையான இடபம்.
உமையை ஒருபாகமாகவுடைய சிராப்பள்ளிக் குன்றிறைவன் திருநாமத்தைச்சொல்ல என் மனம் குளிரும்.

5 மந்திரம் – இரகசியமானது. விரும்பிய பேற்றைத் தருவது. திருநீறும் விரும்பிய பேற்றைக் கொடுக்கவல்லது. சுந்தரம் – அழகு, தந்திரம் – ஆகமம். (பாண்டியனின் வெப்புநோய் நீங்கப்பாடியது)

## கோளறு பதிகம் — பொது

பண் — பியந்தைக் காந்தாரம் இராகம் — நவரோஸ், தாளம் — திஸ்ர திருபுடை.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனல்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 6

திருச்சிற்றம்பலம்

## மூன்றாந் திருமுறை

தலம் — கழுமலம் ( சீகாழி ) இறைவன் — பிரமபுரீசர் இறைவி — திருநிலைநாயகி.
பண் — கொல்லி இராகம் — நவரோஸ் தாளம் — மிஸ்ரசாப்பு.

திருச்சிற்றம்பலம்

மண்ணில்நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல்ல கதிக்கி யாதுமோர் குறைவிலை
கண்ணில்நல் லஃதொறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே 7

தலம் — திருக்காளத்தி இறைவர் — திருக்காளத்திநாதர் இறைவி — ஞானப்பூங்கோதை
பண் — கொல்லி இராகம் — நவரோஸ் தாளம் — மிஸ்ரசாப்பு

சந்தமார் அகிலொடு சாதிதேக் கமரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி யென்மனத் துள்ளவே 8

---

6 வேய் - மூங்கில், விடம் - நஞ்சு, கண்டன் - கழுத்தினை உடையவன், ஞாயிறு - சூரியன், பாம்பிரண்டு - இராகு கேது. இறைவனின் அடியார்களை நவக்கிரகங்கள் வருத்தமாட்டா. அவை நன்மையே செய்வன.

7 திருக்கழுமலம் என்னுந் தலத்தில் இறைவன் அம்மையப்பராய் எம் பெருமாட்டியுடன் இருந்தார் என்று வணங்கித்துதித்த திருப்பாடல்.

8 சந்தம் - சந்தனமரம், ஆர் - ஆத்திமரம், சாதி - சாதிக்காய்மரம். சீகாளத்தி என்னும் மற்றொரு பெயர் உண்டு. சீ - சிலந்தி. காளம் - பாம்பு, அத்தி - யானை. இம்மூன்றும் வழிபட்டு முத்தியடைந்ததலம்,

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவன் என்றுநீ பரிவெய்திடேல்
ஆனைமாமலை ஆதியாய இடங்களிற் பலஅல்லர்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. 9

திருச்சிற்றம்பலம்

## நாலாந் திருமுறை — திருநாவுக்கரசுசுவாமிகள்

*தலம் — திருவதிகை வீரட்டானம், இறைவன் — வீரட்டானேசுவரர், இறைவி — திரிபுரசுந்தரி*
*பண் — கொல்லி, இராகம் — நவரோஸ், தாளம் — மிஸ்ரசாப்பு*

திருச்சிற்றம்பலம்

கூற்றா யினவாறு விலக்ககிலீர் கொடுமைபல
செய்தன நானறியேன்
ஏற்றா யடிக்கேஇர வும்பகலும் பிரியாது
வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு
துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா
னத்துறை யம்மானே. 10

*தலம் — திருவையாறு, இறைவன் — ஐயாறப்பர், இறைவி — காமக்கோட்டத்து ஆளுடை நாச்சியார், உலகுடை நாச்சியார் என்பன.*
*பண் — காந்தாரம், இராகம் — நவரோஸ், தாளம் — ரூபகம்*

மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடி
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ்சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறுவருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம் கண்டறி யாதன கண்டேன் 11

---

9 வழுதி - பாண்டியன், (கூன்பாண்டியனை) பரிவு - இரக்கம்.
மங்கையர்க்கரசியாரைப் பார்த்து திருஞானசம்பந்தப் பெருமான் எமக்கு ஆலவாய் அரன் திருவருள் துணையாயிருப்பதால் எவராலும்; நான் பாலனாயிருந்தாலும் எதையும் செய்யமுடியாது என்று கூறியது.

10 கூற்று - இயமன், ஏற்றாய் - இடபவாகனத்தையுடையவர், சூலைநோயால் வருந்தியபோது அதனை நீக்கியருள்க என இரந்து பாடிய திருப்பாடல்.

11 மாதர்ப்பிறை - அழகினையுடைய பிறைச்சந்திரன், பிடி - பெண்யானை, களிறு - ஆண்யானை, திருக்குளத்தில் முழுகி மலைமகளுடன் இறைவனை திருவையாற்றில் கண்டு பரவசமடைந்து உருகிப்பாடிய திருப்பாடல்.

## ஏழாந் திருமுறை — சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தலம் — திருவெண்ணெய் நல்லூர்
இறைவன் — தடுத்தாட்கொண்டநாதர், இறைவி — வேற்கண்ணிநாயகி
பண் — இந்தளம், இராகம் — நாதநாமக்கிரியை, தாளம் — ரூபகம்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடீபெரு மானேஅரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அத்தா வுனக்காளாய் இனி அல்லேன் எனல்ஆமே. 12

தலம் — திருப்புகலூர், இறைவன் — அக்கினீசர், இறைவி — கருந்தாழ்குழலி
பண் — கொல்லி, இராகம் — நவரோஸ் தாளம் — ரூபகம்

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்பினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர்கெட லுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுறவில்லையே. 13

### திருத்தொண்டத் தொகை

பண் — கொல்லிக்கௌவாணம், இராகம் — நவரோஸ், தாளம் — கண்டசாப்பு

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்

---

12 திருவெண்ணெய் நல்லூர் இறைவன் சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட பின்னர் சுந்தரர் கூறியபடி பித்தா எனப் பாடும்படி கட்டளையிட்டார். பித்தன் - பேரருள் உள்ளவன், பிறைசூடி - சந்திரனைச் சூடியவர்.

13 திருப்புகலூர்ப் பெருமானைப் பாடினல் இம்மையில் உணவும் உடையும் தருவார். மறுமையில் சிவலோக வாழ்வு தருவார். ஆதலால், பொய்யர்களைப் பாடாதீர் புலவர்களே என்று பாடினர்.

வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றயார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 14

திருச்சிற்றம்பலம்

— ★ —

இரண்டாவதாண்டுக்குரிய பாடத்திட்டப் பாடல்கள்

# தேவாரத் திருமுறை

## முதலாந் திருமுறை — திருஞானசம்பந்த சுவாமிகள்

தலம் — திருமருகலும், திருச்செங்காட்டங்குடியும்
இறைவன் — திருமருகல் மாணிக்கவண்ணர், இறைவி — வண்டுவார்குழலி, திருக்குழல் நன்மாது.
பண் — கட்டபாடை, இராகம் — நாட்டை, தாளம் — ஆதி.

திருச்சிற்றம்பலம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குன் மதிதவழ் மாடவீதி
மருக னிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தி யாடுங்
கணபதீ யீச்சரங் காமுறவே. 15

---

14 அடியார் தொகையைப்பற்றி இறைவன் கட்டளைப்படிபாடிய திருப்பாடல்

15 அங்கம் - வேதத்தின் அங்கங்கள், அவை - நிருத்தம், சிட்சை, கற்பகம், சந்தஸ், வியாகரணம், சோதிடம் எனபன.
மங்குல் - மேகம். கங்குல் - இரவு. இது வினவுரைப் பாடல். திருமருகலில் ஆளுடையபிள்ளையார். திருச்செங்காட்டங்குடி இறைவன் திருவோலக்கங்கண்டு பாடியது.

தலம் — திருவலிவலம்; இறைவன் — மனத்துணைநாதர், இறைவி — மாழையங்கண்ணி
பண் — பழந்தக்கராகம், இராகம் — ஆரபி, தாளம் — ஆதி

தாயுநீயே தந்தைநீயே சங்கரனே அடியேன்
ஆயுநின்பா லன்புசெய்வா னுதரிக்கின் றதுள்ளம்
ஆய மாய காயந்தன்னு ளைவர் நின்றொன் றவொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவலமே யவனே. 16

தலம் — திருவோத்தூர், இறைவன் — வேதநாதர், இறைவி — இளமுலைநாயகி
பண் — பழந்தக்க ராகம், இராகம் — ஆரபி, தாளம் — ஆதி

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங் கால்
ஓத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே. 17

தலம் — திருத்தோணிபுரம், இறைவன் — தோணிபுரீசர், இறைவி — திருநிலைநாயகி
பண் — பழந்தக்கராகம், இராகம் — ஆரபி, தாளம் — மிஸ்ரதிரிபுட

வண்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினோடும்
ஒண்டரங்க விசைபாடு மளியரசே யொளிமதியத்
துண்டரங்க பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்னிலைமை பரிந்தொருகாற் பகராயே. 18

தலம் — திருக்குற்றாலம், இறைவன் — குற்றாலநாதர், இறைவி — குழல்வாய்மொழியம்மை
பண் — குறிஞ்சி, ராகம் — யதுகுலகாம்போதி, தாளம் — மிஸ்ரதிரிபுட

வம்பார் குன்றந் நீடுயர் சாரல் வளர் வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண்டியாழ்செய் குற்றாலம்
அம்பானெய்யோ டாடலமர்ந்தா னலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர் போலும் நமரங்காள். 19

---

16 காயம் - உடம்பு, ஐவர் - ஐந்து இந்திரியங்கள், ஒட்டார் - பொருந்த விடார்

17 ஒளி - பிரகாசம், மழு - மழுவாயுதம். ஆளுடையபிள்ளையார் சிவனடியார் வேண்டியபடி ஆண்பனைகளைப் பெண்பனைகளாகும் வண்ணம் பாடிய பதிக முதற்பாடல்.

18 மது - தேன், அளி - வண்டு, பூண் - ஆபரணம். இறைவன்மீது பெருங் காதல் கொண்ட தலைவி பிரிவாற்றாமையால் தனனிலைமையை இறைவருக்குணர்த்த வண்டைத் தூதாக அனுப்ப விரும்பி; வேண்டிய தாகப் பாடிய திருப்பாசுரம்.

19 வம்பு - புதுமை, குன்றம் - மலை. நமரங்காள் - நம்மவர்களே. திருக்குற்றாலநாதரை வணங்கிப் பாடிய பதிக முதற்பாசுரம்.

தலம் — திருமருகல் இறைவன் — மாணிக்கவண்ணர், இறைவி — வண்டுவார்குழலி
பண் — இந்தளம், இராகம் — நாதநாமக்கிரியை, தாளம் — ஆதி

சடையாயெனு மால்சர ணீயெனுமால்
விடையாயெனு மால்வெரு வாவிழுமால்
மடையார்குவ ளைமல ரும்மருகல்
உடையாய் தகுமோவிவ ளுண்மெலிவே. 20

தலம் — திருப்புள்ளிருக்கும் வேளூர், இறைவன் — வைத்தியநாதர், இறைவி — தையல்நாயகி
பண் — சீகாமரம், இராகம் — நாதநாமக்கிரியை, தாளம் — ஆதி

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே. 21

## திருவிராகம்

தலம் — திருவாலவாய் (மதுரை), இறைவன் — சொக்கநாதர், இறைவி — மீனாட்சி
பண் — கௌசிகம், இராகம் — பைரவி, தாளம் — ரூபகம்

வீடலால வாயிலாய் விழுமியார்க ணின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே. 22

திருச்சிற்றம்பலம்

---

20 சரண்நீ - அடைக்கலம் நீயே, மடை - நீர்மடை, மருகல் - ஓர் இன வாழை. விஷத்தினால் இறந்த வணிகன் விஷம் தீர்ந்து எழும்படி பாடிய திருப்பதிகப் பாசுரம்.

21 கள் - தேன். மதமத்தம் - மணமுடைய ஊமத்தை. புள் - பறவை, சம்பாதி சடாயு என்னும் இருகழுகாசர் பூசித்த இத்தலத்தை வணங்கி ஆளுடையபிள்ளையார் பாடிய பதிக முதற்பாசுரம்.

22 விழுமியார் - உண்மை ஞானிகள், கழல் - திருவடி, காடு - சுடலை. மதுரையைவிட்டு வெளியேறும்போது பாடிய திருப்பதிக முதற்பாசுரம்.

## நாலாந் திருமுறை — திருநாவுக்கரசு சுவாமிகள்

### திரு அங்கமாலை

பண் — சாதாரி, இராகம் — காமவர்த்தனி

திருச்சிற்றம்பலம்

தலையே நீவணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய். 23

தலம் — திருவாரூர், இறைவன் — வன்மீகநாதர், இறைவி — அல்லியம் பூங்கோதை
பண் — குறிஞ்சி, இராகம் — யதுகுல காம்போதி, தாளம் — மிஸ்ர திரிபுட

முத்துவிதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்டலைமாலை விரதிகள்
அத்தனாரு ராதிரை நாளா லதுவண்ணம். 24

### திருக்குறுந்தொகை

தலம் — திருமறைக்காடு,
இறைவன் — வேதாரணியேசுவரர், இறைவி — யாழைப்பழித்த மொழியம்மை
இராகம — காமவர்த்தனி, தாளம் — மிஸ்ர திரிபுட

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணி னாலுமை காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே. 25

---

23 பலி - பிச்சை, தலைமாலை - மண்டையோட்டினலான மாலை, (தலையி லணிவது இது) தலை இறைவனை வணங்கத் தந்ததென்பதனை வற் புறுத்துவது இந்தப் பாசுரம்.

24 விதானம் - மேற்கட்டி ; கவரி - கவரிமான் மயிர்.
திருவாரூரில் மார்கழித் திருவாதிரை நாளில் நடைபெறும் நிகழ்ச்சி யைத் தெரிவிப்பது இப்பாசுரம்.

25 மண்ணினார் - பூவுலக மக்கள், பங்கர் - பாகத்தையுடையவர், திண்ண மாக - உறுதியாக.
திருமறைக் காட்டைத் தரிசிக்க வந்த அப்பர் தம் கண்களினாலே தரிசிக்க அருள் செய்யும்படி வேண்டிப் பாடிய திருப்பதிக பாசுரம்.

இராகம் — காமவர்த்தனி, தாளம் — மிஸ்ரசாப்பு

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே. 26

## ஏழாந் திருமுறை — சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தலம் — திருக்கலயநல்லூர், இறைவன் — அமிர்தகலாநாதர், இறைவி — அமிர்தவல்லி
பண் — தக்கராகம், இராகம் — காம்போதி, தாளம் — கண்டசாப்பு

திருச்சிற்றம்பலம்

செருமேவு சலந்தரனைப் பிளந்தசுடர் ஆழி
செங்கண்மலர் பங்கயமாச் சிறந்தானுக் கருளி
இருள்மேவும் அந்தகன்மேல் திரிசூலம் பாய்ச்சி
இந்திரனைத் தோள்முரித்த இறையவன்ஊர் வினவில்
பெருமேதை மறையொலியும் பேரிமுழ வொலியும்
பிள்ளையினந் துள்ளிவிளை யாட்டொலியும் பெருகக்
கருமேதி புனல்மண்டக் கயல்மண்டக் கமலங்
களிவண்டின் கணம்இரியும் கலயநல்லூர் காணே. 27

தலம் — திருக்கோளிலி, இறைவன் — பிரமபுரீசர், இறைவி — வண்டமர்குழலி
பண் — நட்டராகம், இராகம் — நாட்டை, தாளம் — ரூபகம்

நீள நினைந்தடியேன் உனை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள்வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்
ஆளிலை யெம்பெருமான் அவைஅட்டித் தரப்பணியே. 28

---

26 மாசில் - குற்றமில்லாத, தென்றல் - தென்றற்காற்று, அறை - ஒலித்தல்,
சமணர்கள் அப்பரை நீற்றறையில் விட்டுப் பூட்டியபோது இறைவன் திருவடியே புகல் எனப் போற்றி வணங்கிய திருப்பாசுரம்.

27 செரு - யுத்தம், ஆழி - சக்கரப்படை, மறையொலி - வேதமோதும் ஓசை, கயல் - மீன்.
இத் திருப்பாசுரத்தால் சலந்தரனை அழித்த வரலாறு, திருமால் சக்கரம் பெற்ற வரலாறு கூறப்படுகின்றது.

28 அட்டித்தர - கொண்டுவந்து சேர்க்க, பணி - கட்டளை.
இங்குயுள்ள மூர்த்தி அவனிவிடங்கர்.
குண்டையூர்க் கிழாரிடம் பெற்ற நெல்லைத் திருவாரூரில் சேர்த்துத் தரும்படி வேண்டிப் பாடிய பாசுரம்.

தலம் — திருப்புன்கூர், இறைவன் — சிவலோகநாதர், இறைவி — சொக்கநாயகி
பண் — நட்டபாடை, இராகம் — காம்போதி, தாளம் — ஆதி

அந்தணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வினுய்க் குன்றன் வன்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமர்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே. 29

திருச்சிற்றம்பலம்

—★—

## மூன்றும் ஆண்டு

### முதலாந் திருமுறை — திருஞானசம்பந்த சுவாமிகள்

தலம் — திருஆவூர்ப்பசுபதீச்சரம்
இறைவன் — பசுபதீச்சரர், இறைவி — மங்களநாயகி
பண் — நட்டபாடை, இராகம் — நாட்டை, தாளம் — ஆதி

திருச்சிற்றம்பலம்

புண்ணியர் பூதியர் பூதநாதர் புடைபடுவார்தம்
மனத்தார்திங்கட்
கண்ணிய ரென்றென்று காதலாளர் கைதொழுதேத்த
இருந்தவூராம்
விண்ணுயர் மாளிகை மாடவீதி விரைகமழ்சோலை
சுலாவியெங்கும்
பண்ணிய பாடல றாதவாவூர்ப் பசுபதியீச்சரம்
பாடுநாவே. 30

---

29 அந்தணாளன் என்றது, மார்க்கண்டேய முனிவரை. காலன் - இயமன். மார்க்கண்டருக்காக இயமனை உதைத்து அவன் இறக்கவும் மார்க்கண்டேயர் நித்தியவாழ்வில்இருக்கவும் காப்பாற்றப்பெற்ற வரலாறை இப்பாசுரம் கூறுகிறது.

30 பூதியர் - செல்வமுடையவர், கண்ணி - மாலை, விரை - வாசனை. ஆவூர் பசுபதீசுவரர்மீது பாடிய திருபதிகப் பாசுரம்.

தலம் — திருநள்ளாறு

இறைவன் — நள்ளாறர், இறைவி — போகமார்த்தபூண்முலையம்மை

பண் — பழந்தக்கராகம், இராகம் — ஆரபி, தாளம் — மிஸ்ர திரிபுட

போகமார்த்த பூண்முலையா டன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்டுவெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 31

தலம் — நெடுங்களம், இறைவன் — நித்தியசுந்தரர், இறைவி — ஒப்பிலாநாயகி

பண் — பழந்தக்கராகம், இராகம் — ஆரபி, தாளம் — மிஸ்ர திரிபுட

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப் பேசினல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையினு லுயர்ந்த
நிறையுடையா ரிடர்களையாய் நெடுங்கள மேயவனே. 32

தலம் — திருச்செங்காட்டங்குடி

இறைவன் — கணபதீச்சுவரர், இறைவி — திருக்குழல்நன்மாது

பண் — பழந்தக்கராகம், இராகம் — ஆரபி, தாளம் — மிஸ்ர திரிபுட

நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்ய
சிறைகொண்ட வண்டறையும் செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச் சரத்தானே. 33

---

31 பூண் – ஆபரணம், அகலம் – மார்பு, ஆகம் – மார்பு, ஆர்த்த – நிறைந்த.
திருநள்ளாற்றில் நள்ளாறர் விரும்பி உறைபவர் என்று கூறும் பதிகப் பாசுரம்.

32 மறை – வேதம், நிறை – அழிவின்மை, இடர் – துன்பம்,
திருநெடுங்கள இறைவரை இடுக்கண் நீர்க்கும்படி வேண்டி வணங்கிப் பாடிய பதிகப் பாசுரம்.

33 நறை – தேன், விரை – வாசனை, முட்டாமே – இடைவிடாது, சிறை – சிறகு,
செங்காட்டங்குடி இறைவரை சிறுத்தொண்ட நாயனாரோடும் சேர்ந்து வணங்கிப் பாடிய பதிகப் பாசுரம்.

தலம் — திருக்கோளிலி, இறைவன் — பிரமபுரீசர், இறைவி — வண்டார்பூங்குழலாள்
பண் — பழந்தக்கராகம், இராகம் — ஆரபி, தாளம் — திஸ்ர திரிபுட

நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய வன்புசெய்வோம் மடநெஞ்சே யரனாமம்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே. 34

தலம் — திருப்பராய்த்துறை
இறைவன் — பராய்த்துறைநாதர், இறைவி — பொன்மயிலம்மை
பண் — மேகராகக்குறிஞ்சி, இராகம் — நீலாம்புரி, தாளம் — திஸ்ர திரிபுட

நீறு சேர்வதோர் மேனியர் நேரிழை
கூறு சேர்வதோர் கோலமாய்ப்
பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர் சடை யண்ணலே. 35

திருச்சிற்றம்பலம்

## இரண்டாந் திருமுறை

தலம் — திருக்கேதாரம்
இறைவன் — கேதாரநாதர் இறைவி — கேதாரகௌரியம்மை
பண் — செவ்வழி, இராகம் — யதுகுல காம்போதி, தாளம் — திஸ்ர திரிபுட

தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ள வரிக்
கெண்டைபாய சுனைநீல மொட்டலருங் கேதாரமே. 36

---

34 அடல் - வலிமை, கிளை - சுற்றம், கோள் - மாறுபாடு.
திருக்கோளிலிநாதனின் வாளை வீணாக்காது நஞ்சுண்ட கண்டருக்கு ஆளாய் அன்பு செய்வோருக்கு மாத்திரமல்ல, சுற்றத்தாருக்கும் கேடு நேராது.

35 கூறு - பங்கு, பாறு - பருந்து.
இறைவன் நீறணிந்து தேவிபங்கராய், ஆறுசேர் சடையராய்க் காட்சி தந்தார்.

36 ஐஞ்சுகளிறு - ஐம்புலன்களாகிய யானைகள், சுரும்பு - வண்டு.
திருக்காளத்தியிலிருந்து கேதாரநாதரைப் பாடிய பதிகப் பாசுரம்.

### நாலடி மேல்வைப்பு

தலம் — திருவாவடுதுறை
இறைவன் — மாசிலாமணியீசுரர் இறைவி — ஒப்பிலாமுலையம்மை
பண் — காந்தார பஞ்சமம், இராகம் — கேதாரகவுளை, தாளம் — ஆதி

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே. 37

### திருவிராகம்

தலம் — திருவானைக்கா, இறைவன் — சேர்த்திரன்னாதர், இறைவி — அகிலாண்டநாயகி
பண் — கௌசிகம், இராகம் — பைரவி, தாளம் — ரூபகம்

வானைக்காவில் வெண்மதி மல்குபுல் குவார்சடை
தேனைக்காவி லின்மொழித் தேவிபாக மாயினன்
ஆனைக்காவி லண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார் ஏதுமேத மில்லையே. 38

தலம் — திருச்சண்பைநகர் (சீர்காழி)
இறைவன் — பிரமபுரீசுவரர்; இறைவி — திருநிலைநாயகி
பண் — சாதாரி, இராகம் — காமவர்த்தனி, தாளம் — கண்டசாப்பு

எந்தமது சிந்தைபிரி யாதபெரு மானென
விறைஞ்சியிமையோர்
வந்துதுதி செய்யவளர் தூபமொடு தீபமலி வாய்மையதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்யவமர் கின்றவழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு மேவுபதி சண்பைநகரே. 39

---

37 இடர் – துன்பம், கழல் – திருவடி.
ஆவடுதுறை அரன் திருவடியே சரண் என்று நினைந்து கொடுக்க நிதி இல்லை, திருவடியன்றி வேறு கதி இல்லை என்று நிதி தர வேண்டிப் பாடிய திருப்பதிக பாசுரம்.

38 வான் – ஆகாயம், மல்கு – விளங்கும், புல்கு – பொருந்திய.
திருவானைக்கா இறைவரைத் தொழுது பாடிப் பரவிய திருப்பதிகப் பாசுரப் பாடல். ஆனைக்கா அண்ணலைத் தொழுவார்க்கு அபாயமில்லை.

39 இமையோர் – தேவர், சந்தி – சந்தியாகாலங்கள், குந்தளம் – கூந்தல்
சண்பை நகர் இறைவரை வணங்கிப் பாடிய பாசுரம்.

தலம் — திருச்சிறுகுடி, இறைவன் — மங்களேஸ்வரர், இறைவி — மங்களநாயகி
பண் — சாதாரி, இராகம் — காமவர்த்தனி, தாளம் — ஆதி

திடமலி மதிளணி சிறுகுடி மேவிய
மடமலி யரவுடை யீரே
படமலி யரவுடை யீருமைப் பணிபவர்
அடைவது மமருல கதுவே. 40

தலம் — திருவாலவாய் (மதுரை)
இறைவன் — சொக்கலிங்கப்பெருமான், இறைவி — மீனாட்சி
பண் — புறநீர்மை, இராகம் — பூபாளம், தாளம் — ஆதி

மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மாமனி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி
பணிசெய்து நாடொறும் பரவி
பொங்கழ லுருவன் பூதநாயகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே. 41

திருச்சிற்றம்பலம்

## நாலாந் திருமுறை

தலம் — திருப்பழனம், இறைவன் — ஆபத்சகாயர், இறைவி — பெரியநாயகி
பண் — பழந்தக்கராகம், இராகம் — ஆரபி, தாளம் — திஸ்ர திரிபுட

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானே. 42

திருச்சிற்றம்பலம்

---

40 திடம் - வலிமை, மதிள் - மதில்.
திருச்சிறுகுடிப் பெருமானை வணங்குவோர் தேவருலகடைவர்.

41 வளவன் - சோழன், பங்கயம் - தாமரை, அழல் - நெருப்பு, கயல் - மீன்.
இதுதான் திருவாலவாய் என்று சிவனடியார் கூற, வணங்கிப் பாடிய பாடல்.

42 சொன்மாலை - சொற்கோவை, சென்னி - தலை.
தலைவி குயிலைத் தூதாக இறைவர்பால் விட்டதாகப் பாடிய பாசுரம்.

## ஆறாந் திருமுறை

### திருத்தாண்டகம்

தலம் — திருநல்லூர், இறைவன் — பாலாட்டவேச்சுவரர், இறைவி — திரிபுரசுந்தரி.
இராகம் — அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 43

தலம் — திருப்புகலூர்
இறைவன் — அக்கினீஸ்வரர், இறைவி — கொந்தார்குழலியம்மை
இராகம் — அரிகாம்போதி

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புக லூர் மேவிய புண்ணியனே. 44

திருச்சிற்றம்பலம்

---

43 நைய - மனம் இளக, துருவி - தேடி, மதுவாய் - தேன்வடிவாக. திருநல்லூர் இறைவர் அப்பரடிகளுக்கு திருவடிசூட்டியபோது மகிழ்ச்சி மிக்குப் பாடிய திருத்தாண்டகம்.

44 எண்ணுகேன் - நினைக்கும் தன்மை, களைகண் - பற்றுக்கோடு. அப்பர் இறைவன் திருவடியை அடைந்து முத்தி பெற்ற தன்மையைக் கூறுவது இத் திருத்தாண்டகம்.

## ஏழாந் திருமுறை

தலம் — திருமழபாடி,
இறைவன் — வச்சிரத்தம்பநாதேச்சுவரர் இறைவி — அழகாம்பிகை
பண் — தக்கராகம் இராகம் — பந்துவராளி, தாளம் — ரூபகம்

திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 45

தலம் — திருக்கூடலையாற்றூர்,
இறைவன் — நெறிக்காட்டுநாயகர், இறைவி — புரிகுழல்நாயகி
பண் — புறநீர்மை, இராகம் — பூபாளம், தாளம் — ஆதி

வடிவுடை மழுவேந்தி மதகரியுரி போர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழ லுமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகள் இவ்வழிபோந்த அதிசயம் அறியேனே. 46

திருச்சிற்றம்பலம்

★

---

45 மேனி - திருமேனி, அன்னே - தாயைப் போன்றவரே
மழபாடிவர மறந்தனையோ என்று இறைவர் கனவில் தெரிவிக்க; துயிலுணர்ந்து மழபாடிவந்து வணங்கிப் பாடிய திருப்பதிகப்பாசுரம்.

46 வடி - கூர்மை, பொடி - திருநீறு, அதிசயம் - அற்புதம்,
வேதியவடிவங் கொண்டு வந்த இறைவர் சுந்தரரைப் பார்த்து கூடலையாற்றூர்வழி இது என்று கூறி மறைந்தபோது இறைவனைப் பாடிய பதிகப் பாசுரம்.

# நாலாவது ஆண்டு

## முதலாந் திருமுறை

தலம் — திருவீழிமிழலை, இறைவன் — நேத்திரார்ப்பணேசர், இறைவி — சுந்தரகுசாம்பிகை
பண் — நட்டபாடை, இராகம் — நாட்டை, தாளம் — ரூபகம்

திருச்சிற்றம்பலம்

தடநிலவியமலை நிறுவியொர் தழலுமிழ் தருபடவரவுகொ
டடல சுரரொடமரர் களலைகடல்கடை வுழியெழுமிகுசின
விடமடை தருமிடறுடையவன் விடைமிசைவருமவனுறைபதி
திடமலிதருமறைமுறையுணர்மறையவர்நிறைதிருமிழலையே. 47

தலம் — திருத்தூங்கானைமாடம், இறைவன் — சுடர்க்கொழுந்தீசர், இறைவி — கடந்தைநாயகி
பண் — பழந்தக்கராகம், இராகம் — ஆரபி, தாளம் — ஆதி

ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை
யுடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம்
அடங்கும் இடங்கருதி நின்றீரெல்லாம்
அடிக ளடிநிழற்கீ ழாளாம்வண்ணம்
கிடங்கும் மதிலும் சுலாவியெங்கும்
கெழுமனைக டோறு மறையின்னொலி
தொடங்குங் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 48

---

47 தடம்நிலவியமலை – விசாலமான மந்தாபமலை. குடம் – உறுதி, பாற்கடலைக் கடைந்த வரலாறும் கடைந்தபோது வந்த நஞ்சை தேவர்களைக் காக்க இறைவர் உண்ட வரலாறும் கூறி அப்படியான இறைவர் உறையும் பதி திருவீழிமிழலைத்தலம். இத்தலம் இறைவன் திருமணக் கோலத்துடன் காட்சிதரும் தலம்.

48 ஒடுங்கும்பிணி – வெளிப்படாது மறைந்திருக்கும் நோய், இடங்கு– அகழி
சுலாவு - சுற்றி, கடந்தை - பெண்ணாகடம்.
தூங்கானைமட இறையவரைத் தொழுதால் பிணி, பிறவி, கேடு என்பன இல்லை.

தலம் — திருவெங்குரு, இறைவன் — பிரமபுரீஸ்வரர், இறைவி — திருநிலைநாயகி
பண் — குறிஞ்சி, இராகம் — யதுகுலகாம்போதி, தாளம் — ஆதி

காலை நன்மாமலர் கொண்டடி பரவிக்
கைதொழு மாணியைக் கறுத்தவெங் காலன்
ஓலம திடமுன் னுயிரொடு மாள
வுதைத்தவ னுமையவள் விருப்பனெம் பெருமான்
மாலை வந்தணுக வோதம்வந் துலவி
மறிதிரை சங்கொடு பவளமு னுந்தி
வேலைவந் தணையுஞ் சோலைகள் சூழ்ந்த
வெங்குரு மேவியுள் வீற்றிருந் தாரே. 49

## திருநீலகண்டம்

### பொதுப் பதிகம்

பண் — வியாழக்குறிஞ்சி இராகம் — சௌராட்டிரம் தாளம் — ஆதி

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுது நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 50

## திருத்தாளச்சதி

தலம் — திருக்கழுமலம், இறைவன் — பிரமபுரீசர், இறைவி — திருநிலைநாயகி
பண் — வியாழக்குறிஞ்சி இராகம் — சௌராட்டிரம் தாளம் — ஆதி

பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்ற வும்பரப்
பாலேசேர்வா யேனோர்கான் பயில்கண முனிவர்களுஞ்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின்மங்கை தன்னொடுஞ்
சேர்வார்நாணு ணீள்கயிலைத் திகழ்தருபரிசதெலாஞ்

---

49 கறுத்த - கோபித்த, காலன் - இயமன், வெங்குருகு - சீர்காழி இறைவரை மார்க்கண்டேயர் மலர்தூவி வழிபட இறைவர் இயமனிடமிருந்து காத்தார்.

50 பந்தம் - பாசம் (ஆணவம்) சிலம்பின் மங்கை - மலைமகள், பார் - பூமி சிவனடியார்களைப் பார்த்து சிவப்பணியைச் செய்து முன் செய்த தீவினைகளை நீக்குங்கள். பனிக்காலத்தில் வரும் சுரநோயும் சிவனடியார்களைத் தாக்காது.

சந்தித்தே யிந்தப்பார் சனங்கணின்று தங்கணுற்
றுமேகாண வாழ்வாரத் தகவுசெய்த வனதிடங்
கந்தத்தா லெண்டிக்குங் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார்பூவார் சீர்மேவுங் கழுமல வளநகரே. 51

*தலம் — திருத்தருமபுரம்: இறைவன் — யாழ்மூரிநாதர்; இறைவி — தேனமிர்தவல்லி*
*பண் — யாழ்மூரி; இராகம் — அடாணா தாளம் — ரூபகம்*

மாதர்ம டப்பிடியும் மடவன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலைமக டுணையென மகிழ்வர்
பூதவினைப் படைநின் றிசைபாடவு மாடுவ
ரவர்படர் சடைந்நெடு முடியதொர் புனலர்
வேதமோ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னைதயங் குமலர்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயிறருமபு ரம்பதியே. 52

திருச்சிற்றம்பலம்

## இரண்டாந் திருமுறை

*தலம் — திருமயிலாப்பூர்; இறைவன் — கபாலீச்சரர்; இறைவி — கற்பகவல்லியம்மை*
*பண் — சீகாமரம்; இராகம் — நாதநாமக்கிரியை; தாளம் — ரூபகம்*

### திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிடல் காணாதே போதியோ பூம்பாவாய். 53

---

51 இறைவன் கைலையில் உமைசமேதராக இருக்கும் காட்சியைக் கழுமலைத் திருத்தலத்தில் காணும்படி திருவருள் செய்தார்.

52 பிடி - பெண்யானை, தாது - மகரந்தம்
மலைமகளைத் துணைகொண்டு பூத இசையில் ஆடுபவரும் கங்கையைத் தரித்தவரும் வேதஇசை பாடுபவருமாகிய பெருமானின் இருப்பிடம் திருத்தருமபுரம்.

53 மட்டு - கள், (தேன்) அட்டு - திருவமுது சமைத்து, இட்டல் - இடுதல் திருஞானசம்பந்த சுவாமிகள் பூம்பாவை பேர்சொல்லி மயிலாப்பூர் பூரட்டாதி தினவிழாவைக் காணவருவாய் எனப் பாடிய திருப்பதிகப் பாடல்.

தலம் — திருவலஞ்சுழி இறைவன் — கபர்த்தீசர் இறைவி — பெரியநாயகி
பண் — நட்டராகம் இராகம் — பந்துவராளி தாளம் — ஆதி

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல்வையத்து
முன்னநீபுரி நல்வினைப்பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னுகாவிரி சூழ்திருவலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே. 54

தலம் — திருநாகைக்காரோணம்
இறைவன் — காயாரோகணர் இறைவி — நீலாயதாட்சியம்மை
பண் — செவ்வழி இராகம் — காம்போதி தாளம் — ஆதி

கூனற்றிங்கட் குறுங்கண்ணி கான்றநெடு வெண்ணிலா
ஏனற்பூத்தம் மராங்கோதை யோடும் விராவுஞ்சடை
வானநாட னமரர்பெரு மாற்கிட மாவது
கானல்வேலி கழிசூழ் கடனாகைக் காரோணமே. 55

திருச்சிற்றம்பலம்

## மூன்றாந் திருமுறை

பொதுப் பதிகம்: நமச்சிவாயத் திருப்பதிகம்

பண் — கௌசிகம் இராகம் — பைரவி தாளம் — ஆதி

திருச்சிற்றம்பலம்

காதலாகிக் கசிந்து கண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாமம் நமச்சி வாயவே. 56

---

54 வையம் - பூமி, மணி - இரத்தினம், தாளம் - முத்து
இறைவனை வாயாரப் புகழவும், பாடவும், வழிபடவும், நெஞ்சமே நீ முன்செய்த புண்ணியம் எதுவோ? நல்வினைப் பயனே வலஞ்சுழி இறைவழிபாடாற்றவைத்தது என்று பாடிய பதிகப் பாசுரம்.

55 ஏனல் - தினை, கோதை - கடப்பமலர்மாலை.
நாகைக்காரோணத்திறைவரைப் பாடிப்பரவிய பாசுரம்.

56 காதல் - அன்பு, மல்கி, மிகுந்து, ஓதல் - செபித்தல்,
பஞ்சாட்சரசெபம் செய்பவர் நன்னெறியடைவர்.

திருப்பாசுரம்

பண் — கௌசிகம், இராகம் — பைரவி, தாளம் — ஆதி

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. 57

தலம் — திருச்செங்காட்டங்குடி

இறைவன் — கணபதீச்சுவரர் இறைவி — திருக்குழல்நன்மாது
பண் — பஞ்சமம் இராகம் — ஆஹிரி தாளம் — கண்டசாப்பு

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டு ளனலேந்தி விளையாடும் பெருமானே. 58

தலம் — திருநல்லூர்ப்பெருமணம்

இறைவன் — சிவலோகத்தியாகேசன் இறைவி — திருநீற்றுமையம்மை
பண் — அந்தாளிக்குறிஞ்சி இராகம் — வசந்தசாட்சி தாளம் — ஆதி

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே. 59

திருச்சிற்றம்பலம்

---

57 வானவர் – தேவர். ஆனினம் – பசுக்கூட்டம், வையகம் – பூமி
பிராமணர், தேவர், பசுக்கூட்டம் சிறக்க மழை பெய்யும்.
ஆலயபூசை நிகழும். உலகத்தவர் சுகமாய் வாழ்வர்.

58 கோடு – கிளை, பயப்பு – பசப்பு. வெங்காடு – கொடிய சுடலை, அனல் – நெருப்பு.
அடியார்களும் சிறுத்தொண்டரும் உடன்வர செங்காட்டங்குடி இறைவரைப் பரவி அவர் காட்சியைக் கண்டு பாடிய பதிகப்பாசுரம்.

59 பெருமணம் – திருமணம், நல்லூர்ப்பெருமணம் – திருநல்லூர்ப் பெருமணம் என்னும் திருத்தலம், பெருமணம் – மிக்க மணமான பொருள்கள், நம்பன என்பது நம்பான் என ஈற்றுல் நீண்டது. சூடலரே – சூடுதலை உடையவரும் எனக்குத் திருமணம் வேண்டாமெனப் பாடிய திருப்பாசுரம்.

## நாலாந் திருமுறை

### பொது — திருநாவுக்கரசு சுவாமிகள்

பண் — காந்தாரபஞ்சமம் இராகம் — கேதாரகவுளம் தாளம் — ஆதி

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 60

## ஆறாந் திருமுறை

### திருவையாறு திருந்தாண்டகம்

இராகம் — அரிகுலகாம்போதி

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென் மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ, 61

### இதுவும் திருவையாறு திருத்தாண்டகம்

இராகம் — அரிகாம்போதி

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேயென் உறவேயென் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற

---

60 அப்பரைக் கல்லோடு கட்டி கடலில் போட்டபோது ஐந்தெழுத்தின் துணை கொண்டு கடலில் மிதந்து கரையேறினார்.

61 திருவையாற்றில் செம்பொற்சோதி ஓசையாய் ஒலியாய் ஒப்பற்ற தலைவனாய் மலையரசன் மருகனாய், இனியனாய், என் தலையில் திருவடி வைத்தவனாய் எங்கும் விளங்கும் இறைவனாயுள்ளவன்.

கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 62

திருத்தாண்டகம்

அரிகாம்போதி

இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாயெரியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே. 63

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரு ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே. 64

62 வல்வினைநோய் அடையாவண்ணம் காப்பாற்று என்று வேண்டுகிறார்.

63 இறைவன் உலகமாய் நின்ற நிலையை உணர்த்துகிறது இத் திருத்தாண்டகம்.

64 இத் திருத்தாண்டகமும் எல்லாப் பொருளும் இறைவனே எனக் கொண்டு பக்தி மிகுதியால் பாடியது.

## ஏழாந் திருமுறை — சுந்தரமூர்த்தி சுவாமிகள்

### ஊர்த்தொகை.

பண் — பழம்பஞ்சரம் இராகம் — சங்கராபரணம் தாளம் — ஆதி

திருச்சிற்றம்பலம்

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப் பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே அழுந்தூ ரரசே கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய் பனங்காட் டூரானே
மாட்டூ ரறவா மறவா துன்னைப் பாடப் பணியாயே. 65

தலம் — திருப்பாண்டிக்கொடுமுடி

இறைவன் — கொடுமுடிநாதேசுவரர் இறைவி — பண்மொழியம்மை

பண் — பழம்பஞ்சரம் இராகம் — சங்கராபரணம் தாளம் — ரூபகம்

மற்றுப் பற்றெனக் கின்றிநின் றிருப்பாதமேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந்தேன் இனிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லும்நாநமச்சிவாயவே. 66

தலம் — திருவாலங்காடு

இறைவன் — ஊர்த்தாண்டவர் இறைவி — வண்டார்குழலியம்மை

பண் — பழம்பஞ்சரம் இராகம் — சங்கராபரணம் தாளம் — ஆதி

மூத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையாள் உமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டுஞ் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழைய னூர்மேய
அத்தா ஆலங் காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே. 67

---

65 திருவாரூரில் இருக்கையில் பலவூர்களிலுமுள்ள திருத்தலங்களைத் தியானித்து ஊர்த்தொகையாகப் பாடிய திருப்பாடல்

66 திருவைந்தெழுத்தை எடுத்தோதிப் பெருமானை வழிபாடு செய்து பாடியது. நான் மறந்தாலும் என் நா திருவைந்தெழுத்தை மறவாது.

67 திருவாரூரில் அடியவரை விலகிச் சென்ற சுந்தரர் அடியார் கூட்டத்தை விரைவில் அடையப் பாடியது.

தலம் — திருவொற்றியூர்
இறைவன் — தேவராசிங்கப்பெருமான் இறைவி — வண்டார்குழலி
பண் — தக்கதேசி இராகம் — காம்போதி தாளம் — ஆதி

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நான்பட பாலதொன் றுனல்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப னாகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்று நான் அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரென்னும் ஊருறை வானே. 68

தலம் — திருக்கச்சியேகம்பம்
இறைவன் — ஏகாம்பரநாதர் இறைவி — காமாட்சியம்மை
பண் — தக்கதேசி இராகம் — காம்போதி தாளம் — ஆதி

ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
ஆதி யையம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே 69

தலம் — திருவையாறு
இறைவன் — ஐயாறப்பர் இறைவி — அறம்வளர்த்தநாயகி
பண் — காந்தாரபஞ்சமம் இராகம் — கேதாரகௌளை தாளம் — ஆதி

பரவும் பரிசொன் றறியேன்நான்
பண்டே உம்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும்
எய்த நினைய மாட்டேன்நான்

---

68 கண்ணொளி மறைந்த சுந்தரர் ஒற்றியூரரைத் துயர் நீக்கும்படி பாடிய பதிகப பாசுரம்.

69 சுந்தரர் இடக்கண் பெற்றபோது மகிழ்ந்துபாடிய பதிகப் பாசுரம்.

கரவில் அருவி கமுகுண்ணத்
தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை
அரவந் திரைக்கா விரிக் கோட்டத்
தையா னுடைய அடிகேளோ. 70

தலம் ... திருவாரூர்

இறைவன் — வன்மீகநாதர் இறைவி — அல்லியங்கோதையம்மை

பண் — புறநீர்மை இராகம் — ஸ்ரீபூபாளம் தாளம் ... ஆதி

அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி
முந்தி எழுபபழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக
கெந்தை பிரானாரை என்றுகொல் ஏத்துவதே. 71

தலம் — திருநொடித்தான்மலை (திருக்கைலாசம்)

பண் — பஞ்சமம் இராகம் — ஆஹிரி தாளம் — ஆதி

தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள பத்தயானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித் தான்மலை உத்தமனே 72

திருச்சிற்றம்பலம்

---

70 காவிரி பெருகி பெருவெள்ளமாயிருந்தது கண்டு பாடிய திருப்பதிகப் பாசுரம்.

71 எப்பொழுது திருவாரூரை யடைந்து எந்தைபிரானைத் தொழுவது என்று சொல்லிப் பாடிய பதிகப் பாசுரம்.

72 சுந்தரர் வெள்ளை யானை மீது கயிலாயஞ் செல்லும்போது இறைவனது பேரருட் திறனைப் போற்றிப் பாடியது.

## திருவாசகம் — மாணிக்கவாசக சுவாமிகள்

### எட்டாந் திருமுறை

குறிப்பு: அவ்வவ் வாண்டுத்திட்டத்திற்கேற்ப விரும்பிய பாடல்களைத் தெரிக.

#### மெய் உணர்தல்

திருச்சிற்றம்பலம்

இராகம் — மோகனம் தாளம் — ஆதி

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப்
போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே. 73

#### அறிவுறுத்தல்

நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடக்கச்சீர் மணிக்குன்றே இடையறா அன்பு உனக்குஎன்
ஊடகத்தே நின்று உருகத் தந்தருள் எம் உடையானே.

#### சுட்டு அறுத்தல்

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலில் கீழ்மேல் ஆகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்க்கு

---

73 மெய் – உடம்பு, விதிர்விதிர்த்து – நடுநடுங்கி, விரை – மணம், சயசய – வெல்க வெல்க, கை – ஒழுக்கம்.

74 ஆடகம் - பொன், மணி - மாணிக்க இரத்தினம்

உள்ளந்தாள் நின்று உச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்இணையும் மரமாம் தீவினையி னேற்கே. 75

### ஆத்ம சுத்தி

ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற்கு
அன்புஇலை என்பு உருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின் றதும்இலை
துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறும் அலறிலை
செய்வது ஒன்று அறியேனே 75

### கைம்மாறு கொடுத்தல்

மேலை வானவ ரும்அறி யாததோர்
கோல மேஎனை ஆட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேஇவை வந்துபோம்
கால மேஉனை என்றுகொல் காண்பதே. 77

### ஆனந்தா தீதம்

வான நாடரும் அறியொ ணாதநீ
மறையில் ஈறுமுன் தொடரொ ணாதநீ
ஏனை நாடரும் தெரியொ ணாதநீ
என்னை இன்னிதாய் ஆண்டுகொண்டவா

---

75 வெள்ளம் - கங்கை, விடை - இடபம், உச்சி - தலை.

76 கழல் - திருவடி, பதைத்தல் - துடித்தல், அணிதல் - சூட்டுதல்
அலறுதல் - உரமாக அழுதல்.

77 ஞாலம் - பூமி, ஊன் - உடல், ஆவி - உயிர்.

ஊனை நாடகம் ஆடுவித்தவா
உருகிநானுனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத்து உடைய விச்சையே. 78

நீத்தல் விண்ணப்பம்

கடையவ னேனைக் கருணையி னற்கலந்து ஆண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கு அரசே
சடையவ னேதளர்ந் தேன்எம் பிரான் என்னைத் தாங்கிக்
கொள்ளே. 79

திரு அம்மானை

செங்கண் நெடுமாலும் சென்று இடந்தும் காண்பு அரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்து அருளி
எங்கள் பிறப்பு அறுத்திட்டு எந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கண் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அம்கருணை வார்கழலே பாடுதும் காண் அம்மானாய். 80

திருக்கோத்தும்பி

நான்ஆர்என் உள்ளம்ஆர் ஞானங்கள்ஆர் என்னையார் அறி
வானோர் பிரான்என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி [வார்
ஊன்ஆர் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேன்ஆர் கமலமே சென்று ஊதாய் கோத்தும்பீ. 81

---

78 வானநாடர் - தேவர், மறை - வேதம், ஞானநாடகம் - அறிவுக்கூத்து

79 கடையவன் - கீழ்ப்பட்டவன், கருணை - அருள், கலந்து - உட்புகுந்து

80 அம்மானை - பெண்கள் ஆடும் ஒரு விளையாட்டு, நெடுமால் - திருமால்
இடந்து - தோண்டி, தென்னன் - பாண்டியன்.

81 உடைத்தலை - உடைந்த தலையோடு, பலி - பிச்சை, கமலம் - திருவடித்
தாமரை.

### திருத்தெள்ளேணம்

வான்கெட்டு மாருதம் மாய்ந்து அழல்நீர் மண்கெடினும்
தான்கெட்டல் இன்றிச் சலிப்பு அறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என் உள்ளமும் போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ. 82

அம்பலத்தே கூத்து ஆடி அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும் தேவன் என்று நண்ணுமது என்னேடீ
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாம் அறியா
எம்பெருமான் ஈசா என்று ஏத்தின காண் சாழலோ 83

### திருப்பூவல்லி

வணங்கத் தலைவைத்து வார்கழல் வாய் வாழ்த்த வைத்து
இணங்கச் சீர்அடியார் கூட்டமும் வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 84

### கோயில் மூத்த திருப்பதிகம்

உடையாள் உன்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீஇருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன் உன்

---

82 வான் – ஆகாயம், மாருதம – காற்று, அழல் – நெருப்பு, நான் – ஆணவம் என்னும் செருக்கு

83 நம்பன் – சிறந்தவன், நான்மறை – நான்கு வேதம், ஏத்தின – வணங்கின, சாழல் – பெண்களின் ஒரு விளையாட்டு

84 தலைவணங்க, கழல் வணங்க, வாழ்த்த வாயும், சிவனடியார் கூடிப் போற்ற அம்பலத்தே ஆடுவான்.

அடியார் நடுவுள் இருந்திடுநல்
அருளைப் புரிபொன் அம்பலத்துஎம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்நின்றே. 85

### கண்டபத்து

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்கு
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தம்இலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே. 86

### குழைத்தபத்து

வேண்டத் தக்கது அறிவோய்நீ
வேண்ட முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டின்அல்லால்
வேண்டும் பரிசுஒன்று உண்டுஎன்னில்
அதுவும் உன்தன் விருப்புஅன்றே. 87

### பிடித்தபத்து

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்குஎழுந்து அருளுவது இனியே. 88

---

85 உடையாள் - உமையவள். உமையவள் உன்னுடே கலந்திருக்க உடையாள் நடுவுள் நீயிருக்க அடியேன் நடுவுள் இருவீரும் இருக்கும் அருளைப் புரிவாய்.

86 இந்திரியம் - ஐம்பொறி, அருநரகு - கொடிய நரகம்

87 பரிசு - உபகாரம் அயன் - பிரமன், மால் - விஷ்ணு

88 பொழுதினைச் சுருக்குதல் - காலத்தை வீணாக்குதல், இம்மை - இப்பிறவி

அச்சோப் பதிகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறிவித்து சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே 89

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்புஇலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்குஎழுந்து அருளுவது இனியே. 90

திருச்சிற்றம்பலம்

## ஒன்பதாந் திருமுறை

திருமாளிகைத்தேவர் அருளிச்செய்த

### திருவிசைபபா

தலம் — கோயில் பண் — பஞ்சமம் இராகம் — ஆகிரி

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. 91

89 அத்தன் – தந்தை, ஆறு – வழி, அச்சோ – அதிசயம்.
90 பரிந்து – இரங்கி, ஊன் – உடம்பு. புறம் புறம் - இடங்கள்தோறும்.
91 உலப்பில்லா – அழிதலில்லாத, உணர்வு – முற்றறிவு, அம்பலம் - கனகசபை.

உயர்கொடி யாடை மிடைபட லத்தின்
ஓமதூ மப்பட லத்தின்
பியர்நெடு மாடத் தகிற்புகைப் படலம்
பெருகிய பெரும்பற்றப் புலியூர்
சியரொளி மணிகள் திரந்துசேர் கனகம்
நிறைந்த சிற்றம்பலக் கூத்தா
மயர் அறும் அமரர் மகுடந்தோய் மலர்ச்சே
வடிகளென் மனத்துவைத் தருளே. 92

உறவாகியயோ கமும்போ கமுமாய்
உயிராளி என்றுமென் பொன்னொருநாள்
சிறவா தவர்புரஞ் செற்றகொற்றச்
சிலைகொண்டு பன்றிப்பின் சென்றுநின்ற
மறவா என்னும் மணிநீ ரருவி
மகேந்திர மாமலைமே லுறையும்
குறவா என்னும் குணக் குன்றேஎன்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 93

தலம் — திருவீழிமிழலை பண் — பஞ்சமம் இராகம் — ஆகிரி

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே. 94

வேந்தன் வளைத்தது மேருவில்
அரவுநாண் வெங்கணை செங்கண்மால்
போந்த மதிலணி முப்புரம்
பொடியாட வேதப் புரவித்தேர்ச்

92 தூமப்படலம் - புகைப்படலம், கனகம் - பொன், மகுடம் - முடி.

93 சிலை - வில்லு, குறவா - குறவனே

94 கருணைமாகடல் - அருட்பெருங்கடல், செற்றவர் - பகைவர்

சாங்கை முதலயன் சாரதி
கதியருள் என்னுமித் தையலை
ஆந்தண் திருவா வடுதுறை
யான்செய்கை யாரறி கிற்பாரே. 95

பரிந்தசெஞ் சுடரோ பரிதியோ மின்னோ
பவளத்தின் குழவியோ பசும்பொன்
சொரிந்தசிந் துரமோ தூமணித் திரளோ
சுந்தரத் தரசிது வென்னத்
தெரிந்தவை திகழ்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை யஞ்சொல்
மையல்கொண் டையுறும் வகையே. 96

கருவூர்த்தேவர் பாடியது

பண் — புறநீர்மை இராகம் — பூபாளம்

பின்னுசெஞ் சடையும் பிறைதவழ் மொழுப்பும்
பெரியதங் கருணையுங் காட்டி
அன்னைதேன் கலந்தின் னமுதுகந் தளித்தாங்
கருள்புரி பரமர்தங் கோயில்
புன்னைதேன் சொரியும் பொழிலகங் குடைந்து
பொறிவரி வண்டினம் பாடுந்
தென்னதேன் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 97

துண்டவெண் பிறையும் படர்சடை மொழுப்புஞ்
சுழியமுஞ் சூலமு நீல
கண்டமுங் குழையும் பவளவா யிதழுங்
கண்ணுதற் றிங்கமுங் காட்டிக்

---

65 வேந்தன் – சிவன், கணை – அம்பு, புரவி - குதிரை

96 பரிதி – சூரியன், பவளத்தின்குழவி – பவளக்கொடிக் கொழுந்து

97 மொழுப்பு – திருமுடி, அன்னை – தாய், அமுது - உணவு

கெண்டையுங் கயலு முகளுநீர்ப் பழனங்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வண்டறை மணியம் பலத்துணின் ருடும்
மைந்தனென் மனங்கலந் தானே. 98

புவன நாயகனே யகவுயிர்க் கமுதே
பூரணு வாரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ பன்னகா பரணு
அவனிஞா யிறுபோன் றருள்புரிந் தடியே
னகத்திலு முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலு மமர்ந்தாய்
தனியனேன் றனிமைநீங் குதற்கே. 99

தன்சோதி யெழுமேனித் தபனியப்பூச் சாய்க்காட்டாய்
உன்சோதி யெழில்காண்பா னேவிடவு முருக்காட்டாய்
துஞ்சாகண் ணிவளுடைய துயர்தீரு மாறுரையாய்
செஞ்சாலி வயற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. 100

நெற்றியிற் கண்ணென் கண்ணினின் றகலா
நெஞ்சினி லஞ்சிலம் பலைக்கும்
பொற்றிரு வடியென் குடிமுழு தாளப்
புகுந்தன போந்தன வில்லை
மற்றெனக் குறவென் மறிதிரை வடவாற்
றிடுபுனல் மதகில்வாழ் முதலை
ஏற்றுநீர்க் கிடங்கி லிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. 101

---

98 துண்டவெண்பிறை – வெண்பிறைத்துண்டு, நீலகண்டம் – நீலநிறம் பொருந்திய கழுத்து, பழனம் - சோலை

99 புவனம் - உலகம், பன்னகாபரணன் – பாம்புகளை ஆபரணங்களாக அணிந்தவன், தவளம் - வெண்மை

100 செஞ்சாலி – செந்நெல், தபனியம் – பொன், துயர் – துன்பம்

101 திரை – அலை, எற்று – தள்ளப்பட்டு

பண் — கட்டராகம்

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளி தருதிரு நீறுங்
குவளை மாமலர்க் கண்ணியுங் கொன்றையுந்
துன்றுபொற் குழற்றிருச் சடையுந்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுட்
டிருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறு மென்மனந்
தழன்மெழு கொக்கின்றதே. 102

திருச்சிற்றம்பலம்

சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு

தலம் — கோயில் பண் — பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து புவனியெல்
லாம்விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ னடியோமுக் கருள்புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு
கூறுதுமே 103

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசர்க்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப்பொருள்
பண்டுமின்று மென்றுமுள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே. 104

---

102 துன்று - நெருங்கிய, தவளம் - வெண்மை, அழல் - நெருப்பு

103 மன்னுக - நிலவுக, புவனி - பூமி, நெறி - அறியும்வழி

104 மிண்டுமனத்தவர்—மாறுபாடுள்ள மனத்தையுடையவர் (புறச்சமயிகள்) அண்டங்கடந்தபொருள் - அண்டத்தையுங் கடந்த அப்பாற்பட்ட பொருள்.

நிட்டை யிலாவுட னீத்தென்னை யாண்ட
நிகரிலா வண்ணங்களுஞ்
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டுந்
திறங்களுமே சிந்தித்
தட்டமூர்த் திக்கென் னகநெக வூறும்
அமர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 105

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 106

புரந்தரன் மாலயன் பூசலிட் டோலமிட்
டின்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்பவென் னுயிராண்ட கோவினுக்
கென்செய்ய வல்லமென்றுங்
கரந்துங் கரவாத கற்பகனாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்து நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே 107

சேவிக்க வந்தய னிந்திரன் செங்கண்மா
லெங்குந் திசைதிசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்குழா
மாய்நின்று கூத்தாடும்

105 நீத்து–கைவிட்டு, அட்டமூர்த்தி – எண்வகைத் திருவுருவினைக்கொண்டவன், ஆலநிழல் – கல்லாலமர் நிழல், பட்டன் – ஞான உபதேசகுரு

106 சுருதி – வேதம், சில்லாண்டு – சிலவருடம், சிதையும் – அழியும், கனகம் – பொன்.

107 புரந்தரன் – இந்திரன், கோ – தலைவன், கரந்து – மறைந்து

ஆவிக்க முறைதயென் ஞர்வர்த்த னத்தினை
யப்பனை யொப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 108

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலகுங் கழறவுழறி யுமைமணா வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே. 109

சேலும் கயலும் திளைக்குங் கண்ணாரிளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் குமென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலு மயனு மறியா நெறிதந்து வந்தென்
மனத்தகத்தே
பாலு மமுதமு மொத்து நின்றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 110

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 111

---

108 சேவிக்க – வணங்க, குழாம் - கூட்டம், அப்புறத்தான் – அப்பாற்பட்டவன்

109 சீர் – சிறப்பு, திரு – திருவருட்செல்வம், சேவடி – சிவந்த திருவடி, விசும்பு - ஆகாயம்

110 சேல் - மீன், கயல் – மீன், மனத்தகத்து - மனத்தினிடமாக,

111 தாதை - தந்தை, பூதலத்தோர் - பூமியிலுள்ளவர்கள், போனகம் - திருவமுது

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ்
வண்டத் தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போனகமு மருளிச்
சோதி மணிமுடித் தாமமு நாமமுந்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 112

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
மெய்க்குங் குழாம் பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று
விம்மிமிகு திருவாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 113

ஆரார் வந்தா ரமரர் குழாத்தி
லணியுடை யாதிரைநாள்
நாரா யணனொடு நான்முக னங்கி
யிரவியு மிந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்க
டிசையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே, 114

எந்தை யெந்தாய் சுற்றமுற்று மெமக்கமு
தாமெம் பிரானென்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன் சீரடியா
ரடிநாய் செப்புரை

---

112 சண்டி - சண்டேசுவரநாயனார்

113 கூத்தொலி - கூத்தாடுமொலி, விழவொலி - திருவிழாவொலி, மழவிடை - இளமையையுடைய இடபம்

113 யாழ் - வீணை, விழா — திருவிழா, ஆளாய் - அடிமையாய்

114 அமரர் — தேவர், அங்கி - அக்கினி, தொல்புகழ் - பழமையானபுகழ்

அந்தமி லானந்தச் சேந்த னெனைப்புகுந்
தாண்டு கொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவ னேயென்று
பல்லாண்டு கூறுதுமே. 115

திருச்சிற்றம்பலம்

## பன்னிரண்டாந் திருமுறை

### பெரியபுராணம்

சேக்கிழார் சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

உலகெ லாம்உணர்ந் (துஓ) தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 116

எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம். 117

தண்ணளி வெண்குடை வேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண்மழைபொழிந்தார்வானவர்பூமழைபொழிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான். 118

---

115 சிந்தை – சிந்தித்தல், பந்தம் - பாசம்

116 வேணி – சடாமுடி, அம்பலம் – கனகசபை, வாழ்த்தி – துதித்து

117 மாக்கதை – தொண்டர்களுடைய பெரிய கதை, தடக்கை – விசால மான திருக்கை, தாழ்செவி – தாழ்ந்த செவி

118 வெண்குடை – வெண்மையான வெற்றிக்குடை, மண்ணவர் – பூமியி லுள்ளோர், வீதிவிடங்கப்பெருமான் – தியாகராசப்பெருமான்

மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடைய னார்க்கு
ஏதமில் கற்பின் வாழ்க்கை மனை இசை ஞானி யார்பால்
தீதகன் றுலகம் உய்யத் திருஅவ தாரம் செய்தார். 119

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒருமூன்றும்
திருந்து சாத்து விகமேஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மகிழ்ந்தார். 120

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி 121

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி 122

சொல்லுவ தறியேன் வாழி
தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி என்னை
வழித்தொண்டு கொண்டாய் போற்றி

---

119 மாதொரு பாகன் – உமாதேவிக்கு இடப்பாதியைக் கொடுத்தவர்
வேதியர் – பிராமணர், ஏதமில் – குற்றமில்லாத

120 ஐந்துபேரறிவு – பஞ்சேந்திரியங்கள், இந்து – சந்திரன்

121 ஆதி – முதற்பொருள், ஏகம் – தனிப்பொருள், தில்லைபொது – கனகசபை,

122 கற்பனை கடந்த – கற்பனையையும் கடந்து நின்ற, கருணை – திருவடிவு

எல்லையில் இன்ப வெள்ளம்
　　எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடும்
　　சேவடி போற்றி என்ன. 123

கொண்டு வந்து மனைப்பு குந்து
　　குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆச னத்திடை
　　வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறு
　　சுவைத்தி றத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில்
　　அமுது செய்ய அளித்துளார் 124

நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான். 125

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
　　வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
　　உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான்
　　மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ்
　　இருக்க என்றார். 126

---

123 வல்லை வந்து – என்னைத்தேடி விரைந்துவந்து, சேவடி – சிவந்த திருவடி

124 மனை – வீடு, பாதம் விளக்கி – திருவடியை அபிடேகித்து, காதல்– பேரன்பு, உண்டி – உணவு, அண்டர் – தேவர், இச்சை – விருப்பம்

125 பாதமலர் சூட்டுதல் – திருவடி தீட்சை செய்தல்

126 இறவாத - அழிவில்லாத, ஆடும்போது – நடனம் ஆடும்போது

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீத்வள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். 127

ஆலமே அமுத மாக உண்டு வானவர்க் களித்துக்
காலனை மார்க்கண் டர்க்காகக் காய்ந்தனை அடியேற் கின்று
ஞாலம்நின் புகழே யாக வேண்டுநான் மறைகள் ஏத்தும்
சீலமே ஆல வாயிற் சிவபெரு மானே என்றார். 128

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைத்தார் 129

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம். 130

திருச்சிற்றம்பலம்

---

127 வேதநெறி – வேதத்தில் கூறிய வழி, புகலி – சீர்காழி

128 ஆலம் – நஞ்சு, காலன் – யமன், ஞாலம் – பூமி

129 அடியார் – சிவனடியார், அமுது – போசனம்

130 மன்று – கனகசபை, நிலவி – விளங்கி

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.
131

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே
132

131 உத்தமி – பார்வதி, இபம் - யானை

132 உம்பர்தரு - தேவலோகத்திலுள்ள கற்பகதரு, தேனு - காமதேனு

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்துக்கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பக்ஷத்தொடு ரக்ஷித் தருள்வதும் ஒருநாளே
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்கநடிக்கக் கழுகொடு கழுகாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் தரிகட எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே.
133

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே. 134

133 அத்தி - யானை, (தெய்வயானையம்மை) சுருதி - வேதம்
134 சஞ்சலம் - கவலை, சிவை - பார்வதி

நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித சாமீ நமோநம வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ
தீப மங்கள சோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள் தாராய்
ஈத லும்பல கோலால பூசையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையும் மறவேனே
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜகெம் பீர நாடாளு நாயக வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி
ஆதி யந்த வுலாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்நல் நாடதில்
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே
135

அபசார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சகரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநான் நினைந்தருள் பெறுவேனோ
இபமா முகன்றனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.
136

135 ஆதி - மூலப்பொருளானவன், தீரர் - ஆண்மையுள்ளவன். தேவ குஞ்சரி - தெய்வயானை அம்மை. உலா - கயிலாய ஞான உலா, ஆசு - ஆசுகவி

136 அபசாரம் - தீமையான செய்கை, இமவான் -- இமயமலை

சிவனுர் மனங்குளிர உபதேச மந்ரமிரு
செவிமீதி லும்பகர்செய் குருநாதா
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின
செயலேவி ரும்பியுளம் நினையாமல்
அவமாயை கொண்டுலகில் விருதாவ லைந்துழலு
மடியேனை அஞ்சலென வரவேணும்
அறிவாக மும்பெருக இடரான துந்தொலைய
அருள்ஞான இன்பமது புரிவாயே
நவநீத முந்திருடி உரலோடே யொன்றுமரி
ரகுராமர் சிந்தைமகிழ் மருகோனே
நவயோக முங்கைதொழு நிசதேவ லங்கிருத
நலமான விஞ்சைக்கு விளைகோவே
தெவயானை யங்குறமின் மணவாள சம்ப்ரமுது
திறல்வீர மிஞ்சுகதிர் வடிவேலா
திருவாவி னன்குடியில் வருவேள்ச வுந்தரிக
செகமேல்மெய் கண்டவிறல் பெருமாளே. 137

மருவே செறித்த குழலார் மயக்கி
மதனு கமத்தின் விரகாலே
மயலே யெழுப்பி யிதழே யருத்த
மலைபோல் முலைக்கு ளுறவாகிப்
பெருகா தலுற்ற கமியேனை நித்தம்
பிரியாது பட்ச முடனேயென்
பிழையே பொறுத்து னிருதாளி லுற்ற
பெருவாழ்வு பற்ற அருள்வாயே
குருவா யரற்கு முபதேசம் வைத்த
குகனே குறத்தி மணவாளா
குளிர்கா மிகுத்த வளர்பூக மெத்து
குடகா விரிக்கு வடபாலார்
திருவே ரகத்தி லுறைவா யுமைக்கொர்
சிறுவா கரிக்கு மிளையோனே
திருமால் தனக்கு மருகா வரக்கர்
சிரமே துணித்த பெருமாளே. 136

137 நவநீதம் – வெண்ணெய், சவுந்தரிகம் - அழகு பொருந்தியவர், மெய் - உண்மைப்பொருள்

138 மரு – மருக்கொழுந்து, குழல் – கூந்தல். மயல் – மோகம், காதல் – ஆசை. கா - சோலை, பூகம் – கமுகு

சரணகமலாலயத்தை அரைநிமிஷ நேர மட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூட மட்டி பவவினையி லேச னித்த
தமியன்மிடி யால்ம யக்க முறுவேனோ
கருணைபுரி யாதி ருப்ப தெனகுறையி வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதி ரத்ன மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்ச வுக்ய
சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞான முத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணு நெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தான ளித்த மயில்வீரா
அதிசயம நேக முற்ற பழனிமலை மீது தித்த
அழகதிரு வேர கத்தின் முருகோனே
139

பாதி மதிநதி போது மணிசடை
நாத னருளிய குமரேசா
டாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முறவருள்
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரு மிளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனி லுறைவோனே
சூர லுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே.
140

139 கமல ஆலயம் - திருவடிக்கோயில், அருணம் - சிவப்பு நிறம்
140 பாதிமதி - பிறைச்சந்திரன், நதி - கங்கை, போது - மலர், வாவி-கடல் சயந்தன் சீதையின் ஆகத்தில் காகவுருக்கொண்டு கொத்த, புல்லை எடுத்து பாணமாய் இராமன் செலுத்த அது காகத்தின் கண்ணை ஒரு விழியடைய மற்றவிழி உருவிய வரலாறு.

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தக ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே. 141

திருமக ளுலாவு மிருபுய முராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெருதரு குமாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில் விளையாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத திருவினை விடாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதன விநோதப் பெருமாள்காண் 142

அகரமு மாகி அதிபனு மாகி
யதிகமு மாகி அகமாகி
அயனெவாகி அரியென வாகி
அரனென வாகி அவர்மேலாய்
இகரமு மாகி யெவைகளு மாகி
யினிமையு மாகி வருவோனே

141 முராரி – திருமால், ஜெகதலம் – பூமி, வான் – ஆகாயம், மயூரம் – மயில், தரளம் – முத்து, வரை – மலை, அமர் – யுத்தம்

இருநில மீதி லெளியனும் வாழ
எனதுமு னோடி வரவேணும்
மகபதி யாகி மருவும் வலாரி
மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை
மகிழ்கதிர் காம முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே.
143

அதிருங் கழல்பணிந்துன் அடியேன்உன்
அபயம் புகுவதென்று நிலைகாண
இதயந் தனில்இருந்து க்ருபையாகி
இடர்சங் கைகள்கலங்க அருள்வாயே
எதிர்அங்(கு) ஒருவர்இன்றி நடமாடும்
இறைவன் தனதுபங்கில் உமைபாலா
பதிஎங் கினும்இருந்து விளையாடிப்
பலகுன் றிலும்அமர்ந்த பெருமாளே
144

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாள்நி னைப்பை இருபோதும்
இதய வாரி திக்குள் உறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பில் உறைவோனே
கனக மேரு ஒத்த புயவீரா
மதுர வாணி உற்ற கழலோனே
வழுதி கூன்நி மிர்த்த பெருமாளே.
145

---

143 மகபதி - இந்திரன், (நூறு யாகஞ் செய்தவருக்கு இந்திரபதவி கிடைக்கும்) வலாரி - இந்திரன், திருமலி - செல்வம் நிறைந்த

144 அபயம் - அடைக்கலம், குன்று - மலை

145 கனகம் - பொன். வழுதி - பாண்டியன்

